**செ.வெ. எண்: 87** **நாள்: 27.01.2012**

# செய்தி வெளியீடு

ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும் நிகழும் குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றம் புரிந்தோரைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனையை பெற்றுத் தருவதிலும், ரயில்வே சொத்துக்களுக்கும், ரயில் பயணிகளின் உடைமைகளுக்கும் உரிய பாதுகாப்பினை அளிப்பதிலும், ரயில்வே காவலர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். என்று சொன்னால் அது மிகையாகாது.

ரயில்வே காவல் நிலையங்களின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரயில்வே காவல் நிலைய காவலர்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாக உயர்த்தப்படாததையும், சென்னை துரித ரயில் போக்குவரத்துக்கென்று இதுவரை பணியிடங்கள் ஒதுக்கப்படாததையும் கருத்தில் கொண்டு, மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் உள்ள சட்டம்–ஒழுங்கு காவல் நிலையங்கள் வகைப்பாடு செய்ததன் அடிப்படையிலும், ரயில் நிலையங்களின் எண்ணிக்கை, ரயில் நிலையங்கள் வழியாகச் செல்லும் ரயில்களின் எண்ணிக்கை, பயணிகளின் எண்ணிக்கை, சுற்றுலா முக்கியத்துவம், விபத்து மற்றும் குற்றங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும், சென்னை ரயில்வே காவல் மாவட்டத்தில் உள்ள 19 காவல் நிலையங்களை மறுவகைப்பாடு செய்ய உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் அடிப்படையில், 2 பெருநகர்-I வகை காவல் நிலையங்கள், 3 பெருநகர் II வகை காவல் நிலையங்கள், 4 உயர்வகை காவல் நிலையங்கள், 5 நடுத்தர வகை காவல் நிலையங்கள் மற்றும் 5 சிறிய வகை காவல் நிலையங்கள் என 19 சென்னை மாவட்ட ரயில்வே காவல் நிலையங்களை மறுவகைப்படுத்தவும், இவ்வாறு மறுவகைப்படுத்தப்பட்ட காவல் நிலையங்களில் பணிபுரிவதற்காக கூடுதலாக 10 ஆய்வாளர்கள், 45 சார் ஆய்வாளர்கள், 55 தலைமை காவலர்கள், 134 காவலர் கிரேடு I, 200 காவலர் கிரேடு II ஆகிய 444 கூடுதல் பணியிடங்களை உருவாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால், அரசுக்கு 11 கோடியே 46 லட்சத்து 98 ஆயிரத்து 200 ரூபாய் செலவு ஏற்படும்.

இதேபோன்று, பெருமளவில் பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையினால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில், போக்குவரத்துத் துறையின் பணிகளை கணினிமயமாக்கல், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், புதிய பகுதி அலுவலகங்கள் மற்றும் மண்டல அலுவலகங்களை உருவாக்குதல், போக்குவரத்துத் துறை அலுவலங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுதல், ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான நடைமுறைகளை எளிதாக்குதல் என பல்வேறு நடவடிக்கைளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் அடிப்படையில், கரூர் மாவட்டத்திலுள்ள குளித்தலையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்திற்கு, குளித்தலை தாலுகா, சத்தியமங்கலம் கிராமத்தில், போக்குவரத்துத் துறைக்கு சொந்தமான இடத்தில், 73 லட்சத்து 98 ஆயிரத்து 800 ரூபாய் செலவில், பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்ட தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் குளித்தலை, கடவூர், மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகிய வட்டங்களில் வசிக்கும் மக்கள் மிகுந்த பயன் அடைவர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 27.1.2012.